**O.S.No. 139/2016**

**Date:12.11.2025**

பி.**வா.சா.3 இன்னாசி**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை 2ம் பிரதிவாதி சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார். 2ம் பிரதிவாதிக்கு எனது சகோதரியை திருமணம் செய்து கொடுத்துள்ளோம். எனக்கு சாட்சி சொல்ல விபரம் சொன்னது 2ம் பிரதிவாதி தான். எவ்வளவு சொத்துக்கு வழக்கு நடக்கிறது என்று கேட்டால் 1 ¼ ஏக்கருக்கு வழக்கு நடக்கிறது. வழக்கு நடக்கின்ற சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது. வழக்கு யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் மாசிலாமணி. மேற்படி வழக்கு இடப்பிரச்சினைக்காக தாக்கல் செய்துள்ளார். நான் தாக்கல் செய்துள்ள முதல் நிலை சாட்சியத்தில் வாய்மொழி பாகம் செய்து கொண்டதாக கூறியுள்ளது எந்த ஆண்டு பாகம் செய்து கொண்டார்கள் என்று கேட்டால் எனக்கு தெரியாது. நான் முதல்நிலை சாட்சியத்தில் கூறியுள்ளவாறு சாமுவேலின் மக்கள் எனது தகப்பனார் அந்தோணி ஊர்பெரியோர்கள் முன்பு வாய்மொழியாக பாகம் செய்து கொள்ளப்பட்டதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. எந்த வாய்மொழி பாகமும் சாமுவேலின் மக்களிடையே நடக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினையில் 2ம் பிரதிவாதிக்கு இடம் ஒதுக்கப்பட்டு அவர் தனித்து விவசாயம் செய்து அனுபவித்து வருவதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு சொத்துக்களை பற்றியோ, சாமுவேலின் மக்களின் சொத்துக்களைப் பற்றியோ ஏதும் தெரியாது என்றாலும் நீங்கள் 2ம் பிரதிவாதியின் மைத்துனர் என்பதால் 2ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதின் பேரில் முதல் நிலை சாட்சியத்தில் பொய்யான சங்கதிகளை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.